# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 145 | 4 Pages | 28.12.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 145 | 4 பக்கங்கள் | 28.12.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## டெல்லியிலும் பரவிய கொரோனா ஜேஎன் 1 வைரஸ்

டெல்லி, டிச.28

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் துவங்கி இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் கொரோனா பாதிப்பு மெல்ல தலைதூக்கும் நிலையில், டெல்லியில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் ஜே.என். 1 வகை பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

"டெல்லியில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் ஜே.என். 1 வகை பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று பேரில் ஒருவருக்கு ஜே.என்.1 வகை பாதிப்பும், மற்ற இருவருக்கு ஒமிக்ரான் வகை பாதிப்பும் ஏற்பட்டு இருப்பது உறுதியாகி இருக்கிறது," என டெல்லி சுகாதார துறை மந்திரி சௌரப் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாடு முழுக்க டிசம்பர் 26ம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் கொரோனா ஜே.என்.1 வகை மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்து இருப்பதாக சுகாதார துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"புதிய வகை கொரோனா பாதிப்புகள் தற்போதைக்கு வீரியம் குறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றன. இவை ஒமிக்ரான் குடும்பத்தை விட்டு தள்ளியே இருப்பதால், இது குறித்து அதிகம் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும், மீண்டும் கொரோனா பாதிப்பு பரவுவது வருந்தக்குரிய விஷயம் தான்."

"இதன்காரணமாகதேவையானமுன்னெச்சரிக்கைநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். முன்னெச்சரிக்கையாக இருப்பதன் மூலம், அவை பரவுவதை தடுக்க முடியும்," என்று கங்காராம் மருத்துவமனையின் இருதவியல் துறையின் துணை தலைவர் மருத்துவர் பாபி பாலோத்ரா தெரிவித்து இருக்கிறார்.

## சமூக நீதி பாதையில் திராவிட மாடல் ஆட்சி: முதல்வர் பேச்சு

சென்னை, டிச.28

சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை சார்பில் திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.171 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும் ரூ. 184 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இதன்பின்னர் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

★ சமூக நீதி பாதையில் திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது.

★ சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நெறிமுறைகளின் படி தமிழ்நாட்டை உருவாக்க முயற்சி.



★ எல்லோரும் எல்லாம் என்ற அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

★ அமைச்சர் கயல்விழி செல்வ ராஜ்ஆக்கப்பூர்வமானதிட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

★ ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலனுக்காக அயராது உழைப்பவர்களுக்கு விருதும், பரிசு தொகையும் வழங்கப்படுகிறது.

★ அம்பேத்கர் விருதுடன் ரூ.5 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டு வருகிறது.

★ தாட்கோ மூலம் 10 ஆயிரம் பேருக்கு ரூ.152 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ முதலீட்டு மானியம் வழங்க 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ★ கடந்த 3 ஆண்டுகளில் ரூ.175 கோடி மதிப்பில் 12 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

★ பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தைமேம்படுத்ததொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ சமூக வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## இனி இப்படி தான் சொல்லனும்.. அயோத்தி ரெயில் நிலையத்தின் பெயர் மாற்றம்



டெல்லி, டிச.28

அயோத்தி ரெயில் நிலையத்தின் பெயர் மாற்றப்படுவதாக எம்.பி. லல்லு சிங் தெரிவித்து உள்ளார். டிசம்பர் 30ம் தேதி ரெயில் நிலையத்தை பிரதமர் மோடி நேரில் திறந்து வைக்க இருக்கும் நிலையில், அயோத்தி ரெயில் நிலையம் என்ற பெயர் "அயோத்தி தாம்" என மாற்றப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் மோடியின் அறிவுறுத்தலின் படி அயோத்தி ரெயில் நிலையம் என்ற பெயர், 'அயோத்தி தாம்' என்று மாற்றப்படுகிறது. பொது மக்கள் எதிர்பார்ப்புக்கு இணங்கும் வகையில், புதிதாக கட்டப்பட்டு இருக்கும் அயோத்தி ரெயில் நிலையத்தின் பெயர் அயோத்தி தாம் சந்திப்பு என மாற்றப்படுகிறது," என்று லல்லு சிங் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ரெயில் நிலையத்தை வரும் டிசம்பர் 30ம் தேதி திறந்து வைக்கும் பிரதமர் மோடி, அங்கிருந்து நேரடியாக ராமர் கோவிலுக்கு சென்று முன்னேற்பாடு பணிகளை மேற்பார்வையிட உள்ளார். பிரமாண்டமாக உருவாக்கப்பட்டு இருக்கும் ரெயில் நிலையத்தில் 12 லிஃப்ட்கள், 14 எஸ்கலேட்டர்கள், உணவகங்கள், பயணிகள் ஓய்வறை என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு உள்ளது.

## திருப்பூரில் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், டிச.28

தொழிற்படிப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை தேர்ந்தெடுத்து படிக்கும்முன்னாள்படைவீரர்களின் சிறார்களுக்கு பிரதம மந்திரியின்; கல்வி உதவித்தொகை 2023 , 24 ஆம் கல்வி ஆண்டிற்கு விண்ணப்பித்திட கடைசி தேதி 30.11.2023 ஆகும். ஆனால் தற்போது 01.01. 2024 முதல் 05.01.2024 வரை பிரதம மந்திரியின் கல்வி உதவிதொகைற்கானஇணையதளம் மீண்டும் திறக்கப்பட உள்ளது. எனவே, பல்வேறு காரணங்களால் விண்ணப்பிக்க தாமதமான விண்ணப்பங்கள்இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்கள் அறிந்திட திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 0421 2971127 வாயிலாகவோ தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாய்ப்பினை முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் பயன்படுத்திக் கொண்டு 05012024க்குள் www.ksb.gov.in என்ற முளுடீ இணையதளத்தில் பிரதம மந்திரியின்கல்விஉதவித்தொகை;கு விண்ணப்பித்து பயனடையுமாறு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்கள்.

## புத்தாண்டு ஸ்பெஷல்.. ஜன.1 முதல் கியாஸ் சிலிண்டர் விலை குறைப்பு.. அரசு அறிவிப்பு



ராஜஸ்தான், டிச.28

ராஜஸ்தான் மாநிலத்தில் புதிதாக ஆட்சி அமைத்து இருக்கும் பா.ஜ.க. அரசு கியாஸ் சிலிண்டர்கள் விலையை குறைப்பதாக அறிவித்து இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலின்போது ஆட்சிக்குவந்தால்சிலிண்டர்விலையைகுறைப்பதாக பா.ஜ.க. தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்து இருந்தது.

அந்த வகையில், ஜனவரி 1ம் தேதி முதல் உஜ்வாலா திட்டத்தின் கீழ் கியாஸ் சிலிண்டர்கள் ரூ. 450க்கு வழங்கப்படும் என்று அரசு அறிவித்து இருக்கிறது. தற்போது அம்மாநிலத்தில் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் ரூ. 500க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுதொடர்பான அறிவிப்பை வெளியிட்ட போது பேசிய முதலமைச்சர் பஜன் லால் ஷர்மா, மானிய தொகை பயனாளிகள் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு விடும் என்று தெரிவித்து இருக்கிறார்.

## மழை, வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது: நிர்மலா சீதாராமன் மீண்டும் திட்டவட்டம்

தூத்துக்குடி, டிச.28

தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கடந்த 17, 18ந்தேதிகளில் பெய்த வரலாறு காணாத மழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பெரும் பாதிப்பு, சேதாரங்கள் ஏற்பட்டது.

இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகளை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் நேற்றுபார்வையிட்டார்.தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ள சேதங்கள் குறித்து புகைப்பட கண்காட்சி கலெக்டர் அலுவலகத்தில் வைக்கப்பட்டு இருந்தது. அதனை நிர்மலா சீதாராமன் பார்வையிட்டார்.

பாதிப்பு குறித்த விவரங்களை வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கே.பிரபாகர் அவருக்கு விளக்கி கூறினார். அதனைத்தொடர்ந்து மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் தலைமையில் மழை வெள்ள சேதங்கள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் மத்திய இணை மந்திரி எல்.முருகன், அமைச்சர் தங்கம் தென்னரசு, கனிமொழி எம்.பி., வருவாய் நிர்வாக ஆணையர் பிரபாகர், சுகாதாரத்துறை செயலாளர் ககன்தீப்சிங் சிங் பேடி, மின்வாரிய தலைவர் ராஜேஷ் லக்கானி, நகராட்சி நிர்வாக செயலாளர் கார்த்திகேயன், மேலாண்மை துறை ஆணையர் அபூர்வா, சிறு தொழில் துறை ஆணையர் அட்சயா பட்நாயக், மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி, மாநகராட்சி கமிஷனர் தினேஷ்குமார் மற்றும் உயர் அதிகாரிகள் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள சேதங்கள் குறித்து 'பவர் பாயிண்ட் பிரசன்டேசன்' மூலம் விளக்கி கூறினர்.

முன்னதாக கலெக்டர் அலுவலக ஆலோசனை கூட்டம் 45 நிமிடங்கள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சுமார் 1¾ மணி நேரம் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் வெள்ள சேதங்கள், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்,



கொடுக்கப்பட வேண்டிய நிவாரணங்கள் குறித்து மத்திய மந்திரி நிர்மலாசீதாராமன்நீண்ட ஆலோசனை நடத்தினார்.

அப்போது மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், தேவையான நிவாரணம் குறித்தும் அமைச்சர்தங்கம் தென்னரசு 78 பக்க ஆய்வு அறிக்கையை மத்திய மந்திரி நிர்மலா சீதாராமனிடம் வழங்கினார்.

அதனை முடித்து கொண்டு தூத்துக்குடி மாநகர பகுதியில் அதிகம் பாதிக்கப்பட்ட குறிஞ்சி நகர் பகுதி, உடைப்பு ஏற்பட்ட கோரம்பள்ளம் குளம் ஆகியவற்றை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி தாலுகா கோரம்பள்ளம், மறவன்மடம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, முறப்ப நாடு, கோவில்பத்து மற்றும் ஏரல் தாலுகாவில் உள்ள ராஜபதி தெற்கு வாழ வல்லான் ஆகிய பகுதிகள் என மாவட்டத்தில் சுமார் 120 கிலோ மீட்டருக்கு பயணித்து வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார்.

அப்போது, உமரிக்காடு பொதுமக்கள் வரலாறு காணாத மழையால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது.

எனவே மழை, வெள்ளபாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர். அதற்கு பதில் அளித்த நிர்மலா சீதாராமன், பொதுவாக மழை, வெள்ள பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவிக்க இயலாது என தெரிவித்தார்.

வங்கிகள் மூலமாக என்ன உதவி செய்ய முடியுமோ அதை நாங்கள் செய்வோம். மாநில அரசுக்கு வங்கிகள் மூலமாக கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது.

இதுவரை தேசிய பேரிடர் என எப்போதும் அறிவிக்கப்பட்டது இல்லை. சுனாமி ஏற்பட்ட போது கூட தேசிய பேரிடராக அறிவிக்கவில்லை என தெரிவித்தார்.

எனினும் மாநில அரசின் அதிகாரிகள் இயற்கை பேரிடரை அறிவிப்பதில் நடவடிக்கை எடுத்தவுடன் வங்கிகள் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களை பின்பற்றி கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்க எஸ்.எல்.பி.சி. செயல்முறை மூலம் முன் முயற்சிகள் எடுக்க அறிவுறுத்தினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பிரதமர் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெறும் தகுதி வாய்ந்த 2.5 லட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையை தகுந்த நேரத்தில் வழங்கி அறுவடை பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார். (பிரதமரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 1.38 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் உள்ளது). வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு காப்பீட்டு கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற மாவட்ட நிர்வாகத்தினர்ஒருங்கிணைந்துதொடர் முகாம்களை நடத்த வேண்டும் என காப்பீட்டு நிறுவனங்களை நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

தோட்டக்கலை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வெள்ளத்தின் போது வீடுகளை இழந்து காப்பகங்களில் தங்கி உள்ள பெண்கள் தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என நிர்மலா சீதாராமனிடம் கேட்டுக்கொண்டனர்.

அப்போது தகுதியான பெண்களின் வீடுகளை மீண்டும் கட்டித்தரவும், பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வராதவர்களுக்கு மீண்டும் வீடுகளை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் பொங்கல் பண்டிகை நெருங்குவதையொட்டி தாங்கள் தயாரித்து வைத்த பொருட்கள் மற்றும் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளதாக பெண் தொழிலாளர்கள் கூறினர்.

அப்போது மண்பாண்ட பொருட்கள் மற்றும் ரங்கோலி வண்ணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உள்ளூர் பெண்கள் மீண்டும் தொழில் தொடங்கவும்,அவர்களுக்குதேவையான நிவாரணங்களை வழங்குமாறும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். மேலும் மழை வெள்ளத்தால் வாழ்வாதாரத்தை இழந்த வியாபாரிகள், தொழில் அதிபர்கள் கருத்துக்களை கேட்டறிந்தார். அப்போது கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

ஏற்கனவே வாங்கிய கடனுக்கு செலுத்தும் மாதாந்திர தவணை 2 ஆண்டிற்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பன கோரிக்கைகளை வலியுறுத்தினர். அப்போது பேசிய நிர்மலா சீதாராமன் வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் உள்ளிட்ட சலுகைகள் வழங்குவது குறித்து மத்திய அரசுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

## அங்கிட் திவாரி விவகாரம் தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை மீண்டும் கடிதம்

திண்டுக்கல், டிச.28

திண்டுக்கல் அரசு மருத்துவமனை டாக்டர் சுரேஷ் பாபு சொத்துக்குவிப்பு வழக்கில் சிக்கினார். இந்த வழக்கில் இருந்து அவரை விடுவிப்பதற்கு மதுரை அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரி ரூ.40 லட்சம் லஞ்சம் வாங்கியதாக திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர்.

இந்த சூழலில் அமலாக்கத்துறை அலுவலகத்தில் தமிழக லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தியதுசட்டவிரோதசெயல் என்றும், சோதனை என்ற பெயரில் அடையாளம் தெரியாத ஏராளமான பேர் புகுந்து வழக்கு தொடர்பான முக்கிய ஆவணங்களைதிருடி சென்றுவிட்டனர் என்றும் அமலாக்கத்துறை சார்பில் தமிழக போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவாலுக்கு பரபரப்பு புகார் மனு அனுப்பப்பட்டது. இந்த புகாரைதமிழக போலீசார் மறுத்தனர்.

இந்நிலையில், அங்கிட் திவாரி விவகாரத்தில் அமலாக்கத்துறை அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்ததாக தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் மீண்டும் கடிதம் எழுதியுள்ளனர்.

மேலும், சம்மனில் விரிவானதகவல் இல்லை எனவும் குறிப்பாக யார் அனுப்பிய சம்மன்? எனவும் எங்களுக்கு தெரியவில்லை என அமலாக்கத்துறை குற்றம்சாட்டி யுள்ளது. அந்த சம்மனில் செவ்வாய்கிழமை 11 மணிக்கு ஆஜராக வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டரக அலுவலக கூட்டரங்கில் சாலைப்பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு மற்றும் குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

## தூத்துக்குடியில் வெள்ளத்தால் சேதமடைந்த ஆவணங்களை பெற சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு



தூத்துக்குடி, டிச.28

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த ஆவணங்கள், சான்றுகளை பெற ஏதுவாகசிறப்பு முகாம்கள்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 28ம் தேதி மற்றும் 29ம் தேதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெறும் என அம்மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

அதன்படி, தூத்துக்குடி வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம், மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு மண்டல அலுவலகங்களில் நடைபெறுகிறது.

இதேபோல், மாப்பிள்ளையூரணி கிராம நிர்வாக அலுவலகத்தில் வைத்தும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர்களின் எதிர்காலத்தை அரசு சிதைத்து விடக்கூடாது அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, டிச.28

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை நடப்புக் காலாண்டிற்கு வழங்கப்படவில்லை. மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்திற்காக, தமிழக அரசின் அனைத்துத் திட்ட பயனாளிகளுக்கும் வழங்கப்படும் உதவிகள் மறு ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும், மகளிர் உரிமைத் தொகை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை நிறுத்தப்பட இருப்பதாகவும் வேலைவாய்ப்பு அதிகாரிகள் கூறியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன. இத்திட்டத்திற்கான நிபந்தனைகளை தளர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

அத்துடன்பத்தாம்வகுப்பில் தோல்வியடைந்தோருக்கு ரூ.1,000, தேர்ச்சி பெற்றோருக்கு ரூ.2,000, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றோருக்கு ரூ.3,000, பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.4,000, பட்டமேற்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.5,000 வீதம் உதவித் தொகையை உயர்த்தி வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

## டிசம்பர் 31ம் தேதி ரேஷன் கடைகள் செயல்படும்: எந்தெந்த மாவட்டங்களுக்கு தெரியுமா?

நெல்லை, டிச.28

நெல்லை மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18ம் தேதிகளில் பெய்த அதி கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதன்படி வெள்ளத்தால் சேதமடைந்த விவரங்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டது.

இதற்கிடையே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண தொகைக்கான டோக்கன் விநியோகம் இன்று தொடங்கியது.

இந்நிலையில், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் டிசம்பர் 31ம் தேதி ரேஷன் கடைகள் செயல்படும். நிவாரண நிதி வழங்கும் பணிகளுக்காக அன்று ரேஷன் கடைகளுக்கு விடுமுறை இல்லை என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மழையால் ஏற்பட்ட பள்ளங்களால் வாகன ஓட்டிகள் திணறல்



சென்னை, டிச.28

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த வடகிழக்கு மழையால் கடும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. சென்னையில் இருந்து திருச்சி நோக்கி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கிளாம்பாக்கம் முதல் உளுந்தூர்பேட்டை வரை சாலைகளை மழை நீர் அடித்து சென்றது. இதனால் பல இடங்களில் சாலைகள் குண்டும் குழியுமாக, பள்ளமாக உருக்குலைந்து காணப்படுகின்றன. இந்த நிலையில் மழை நின்று பல வாரங்கள் கடந்த நிலையிலும் இந்த சாலை இன்னும் சீரமைக்கப்பட வில்லை. இதனால்சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் ஓட்டி செல்பவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். சாலையில் வாகனம் ஓட்டவே திணறுகிறார்கள்.

இதுகுறித்து வாகன ஓட்டிகள் வேதனையுடன் கூறியதாவது:


சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் கிளாம்பாக்கம் தொடங்கி செங்கல்பட்டு பரனூர், ஆத்தூர், விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை வரை 4 சுங்கச்சாவடிகள் உள்ளன. இந்த 4 சுங்கச்சாவடிகளை கடந்து செல்ல நூற்றுக்கணக்கான ரூபாய் கட்டணம் வசூல் செய்கிறார்கள். ஆனால் சுங்க கட்டணம் செலுத்தி சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள், சீரமைக்கப்படாத குண்டும் குழியுமான சாலையில் செல்ல வேண்டி உள்ளது. இதனால் வாகனங்களில் பழுது ஏற்படுகிறது.

சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இரவில் விளக்குகளும் எரிவதில்லை. இதனால் இரவு நேரங்களில் இந்த சாலையில் உள்ள பள்ளங்கள் கண்ணுக்கு தெரியவில்லை. இதனால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. மழை நின்ற பகுதிகளிலாவது போர்க்கால அடிப்படையில் சாலைகளை சீரமைக்க வேண்டும். சாலைகளில் உள்ள பள்ளங்களால் விபத்து நிகழும் ஆபத்து உள்ளது. அதனை கவனத்தில் கொண்டு சாலை பள்ளங்களை விரைந்து சரி செய்ய வேண்டும்.

சுங்கக்கட்டணம் வசூலிப்பதில் தீவிரம் காட்டும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சாலைகளை பராமரிப்பதிலும், சீரமைப்பதிலும் அக்கறை காட்டுவதில்லை. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கண்டு கொள்ளாததால் வாகன ஓட்டிகள் அவதிப்படுகிறார்கள்.

எனவே இந்தசாலையை உடனடியாக சீரமைக்க வேண்டும். மாமண்டூர் பாலத்திலும் சாலை குண்டும் குழியுமாகவே உள்ளது. இதனால் இந்த பகுதியில் 10 கி.மீ. வேகத்தில் மட்டுமே வாகனங்கள் செல்ல முடிகிறது. எனவே தமிழக அரசு, சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துக்கு அழுத்தம் கொடுத்து பணிகளை உடனே தொடங்கச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பாய்லர் வெடித்து உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளரின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரணம்



சென்னை, டிச.28

சென்னை தண்டையார் பேட்டையில் இயங்கு வரும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் இன்று எண்ணெய் கசிவு ஏற்பட்டு பாய்லர் வெடித்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 4 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். உயிரிழந்தவரின் பெயர் பெருமாள் வயது (52) கரிமேடு பகுதியை சேர்ந்தவர்.

இச்சம்பவம் அறிந்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பாய்லர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளரின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்குவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும், பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## சென்னையில் 30 இடங்களில் வெடிகுண்டு மிரட்டல் மோப்ப நாய்களுடன் விரைந்த போலீசார்

சென்னை, டிச.28

சென்னையில் 30 இடங்களில் வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் வந்துள்ளது. சென்னையில் பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரை உள்பட 30 இடங்களில் குண்டு வெடிக்கும் என டிஜிபி அலுவலகத்திற்கு மர்ம நபரிடம் இருந்து மின்னஞ்சல் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. போலீசார் மோப்ப நாய்களுடன் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரைக்கு விரைந்துள்ளனர்.

## ஓசூர், தருமபுரி, சேலம் வழியாக பெங்களூரு–கோவைக்கு 'வந்தே பாரத்' ரெயில் இயக்கம்



தருமபுரி, டிச.28

பெங்களூரு கோவை இடையே இயக்கப்படும், 'வந்தே பாரத்' ரெயில், சேலம், தருமபுரி, ஓசூர் வழியாக செல்ல இருப்பதால், பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் பகுதியிலிருந்து, கர்நாடகா மாநிலம் பெங்களூருக்கு குறைந்த நேரத்தில் சுமூகமான மற்றும் விரைவான பயணத்தை பயணிகள் மேற்கொள்ளும் வகையில், வருகிற 30ந் தேதி முதல், 'வந்தே பாரத்' ரெயில் இயக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

கோவையிலிருந்து அதிகாலை, 5.00 மணிக்கு புறப்படும், 'வந்தே பாரத்' ரெயில் திருப்பூர் நிலையத்துக்கு காலை 5.42 மணிக்கும், ஈரோட்டிற்கு காலை 6.27 மணிக்கும், சேலத்திற்கு, 7.20 மணிக்கும், தருமபுரிக்கு 8.32 மணிக்கும், ஓசூருக்கு 10.05 மணிக்கும் சென்றடையும். கடைசியில் பெங்களூரு கன்டோன்மென்ட் ரெயில்வே நிலையத்தை காலை 11.30 மணிக்கு அடையும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அதேபோல் மறுமார்க்கத்தில் பெங்களூரு கன்டோன்மென்ட் ரெயில்வே நிலையத்தில் இருந்து மதியம் 1.40 மணிக்கு புறப்படும் வந்தே பாரத் ரெயில் ஓசூருக்கு மதியம் 2.52 மணிக்கும், தருமபுரிக்கு மாலை 4.16 மணிக்கும், சேலத்திற்கு 5.53 மணிக்கும், ஈரோட்டிற்கு 6.45 மணிக்கும், திருப்பூருக்கு இரவு 7.25 மணிக்கும், கோவைக்கு, 8.00 மணிக்கும் சென்றடையும்.

இந்த ரெயிலில், 7 ஏ.சி., பெட்டி சேர்கோர் மற்றும் ஒரு எக்சியூட்டிங் சீட்டர் பெட்டி இணைக்கப்பட்டிருக்கும் என தகவல் கிடைத்துள்ளது.

கோவை பெங்களூரு, 'வந்தே பாரத்' ரெயிலுக்கான கட்டண விபரமும் வெளியிடப்பட்டுள்ளது. சேலம், தருமபுரி, ஓசூர் வழியாக, 'வந்தே பாரத்' ரெயில் இயக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளதால், பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து இன்று வந்தே பாரத் ரெயில் சோதனை ஓட்ட தருமபுரி ரெயில் நிலையத்தில் இன்று நடைபெற்றது. இந்த ரெயில் இன்று கோவையில் இருந்து சேலம் வழியாக 8.15 மணிக்கு வந்தது. பின்னர் 8.19 மணிக்கு புறப்பட்டது. வந்தேபாரத் ரெயில் தருமபுரி ரெயில் நிலையத்தை அடைந்ததும், பயணிகள் உற்சாகம் அடைத்தனர்.

## காவல் நிலையத்தில் வெடித்து சிதறிய பட்டாசு மேற்கூரை விழுந்து ஒருவர் உயிரிழப்பு



சேலம்,டிச.28

சேலம் மாவட்டம் சங்ககிரி காவல் நிலைய வளாகத்தில், ஆய்வு செய்வதற்காக சுத்தம் செய்தபோது பட்டாசு வெடித்து சிதறியது.

திடீரென பட்டாசு வெடித்ததில் மியாமத்துல்லா என்பவர் உயிரிழந்துள்ளார். புகார் அளிக்க வந்த பவானியை சேர்ந்த பரத் என்பவர் படுகாயம் அடைந்துள்ளார்.

பட்டாசு வெடித்ததில் காவல் நிலைய மேற்கூரை சரிந்து விழுந்து மியாமத்துல்லா உயிரிழந்துள்ளார். இந்த விவகாரத்தை தொடர்ந்து, சங்ககிரி காவல் நிலைய வளாகத்தில் மாவட்ட எஸ்.பி நேரில் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

விபத்து தொடர்பாக போலீசார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

## எண்ணூர் வாயு கசிவு தொழிற்சாலை இயங்க தடை விதித்து நோட்டீஸ்




சென்னை, டிச.28

சென்னை எண்ணூர் அருகே பெரிய குப்பம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வாயு கசிவு ஏற்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக, தொழிற்சாலை இயங்க எதிர்த்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். பின்னர், அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியதை அடுத்து மக்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு வெளியே மாசு கட்டுப்பாட்டு வாரியம் நோட்டீஸ் ஒட்டியுள்ளது.

ஐஆர்எஸ், அனுமதி பெறும் வரை தொழிற்சாலை இயங்க கூடாது என உத்தரவிட்டுள்ளார்.

மேலும், எந்த இடத்தில் வாயு கசிவு ஏற்பட்டதோ, அதை கண்டறிந்து உடனடியாக சரி செய்ய வேண்டும்.

## பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவருக்கும் மருத்துவ சோதனை: அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை, டிச.28

தமிழக பாரதிய ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சென்னை எண்ணூர் அருகேஅமைந்துள்ளதனியார் தொழிற்சாலையில், திரவ அமோனியா குழாயில் கசிவு ஏற்பட்டதால், எண்ணூர் சுற்றியுள்ள பெரும்பாலான கிராம பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது.

பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது. பொது மக்கள் அனைவருக்குமே தகுந்த மருத்துவ சோதனைகள் நடத்தி, அவர்கள் உடல் நலத்தை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எண்ணூரிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்திலும், முறையான பாதுகாப்பு நடைமுறைகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிக்க, தமிழக அரசும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன் என கூறியுள்ளார்.

## பட்டதாரி ஆசிரியர் தேர்வு ஒத்திவைப்பு

சென்னை, டிச.28

ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிவிக்கை எண் 03 / 2023 மற்றும் 03A / 2023 68T UL. 07.01.2024 அன்று நடைபெற இருந்த பட்டதாரி ஆசிரியர் வட்டார வளமைய ஆசிரியர் (BT / BRTE) தேர்வானது மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை கருத்தில் கொண்டும் தேர்வர்களின் சிரமத்தை தவிர்க்கும் பொருட்டும் தேர்வு ஒத்திவைக்கப்படுகிறது. மேற்கண்ட தேர்வானது வருகின்ற 04.02.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும் என விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. 07.01.2024 அன்று நடைபெறவிருந்த தேர்விற்கான நுழைவு சீட்டினை 04.02.2024 அன்று நடைபெறவிருக்கும் தேர்விற்கு பயன்படுத்தலாம் என விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

# வெள்ள பாதிப்பு எதிரொலி அனல்மின் நிலையம், ராக்கெட் ஏவுதளம் பணிகள் தாமதம்



உடன்குடி, டிச.28

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் உடன்குடி அனல் மின் நிலையம் மற்றும் குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிமிக மிக வேகமாக நடந்து வந்தது

உடன்குடியில் ரூ.9,250 கோடி மதிப்பீட்டில் 1,301 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்நிலையம் அமைக்கும் பணிக்காக கல்லா மொழி கடற்கரையில் நிலக்கரி இறங்கு தளம் அமைக்கும் பணி இரவு, பகலாக நடந்து முடிவடை யும் நிலையில் இருந்தது.

கடலில் அமைக்கப்பட்டிருக்கும் பாலம், கட்டிடங்கள் கட்டும் பணிகள் வேகமாக நடந்தன. கப்பலில் வரும் நிலக்கரியை அப்படியே எதிர்புறம் உள்ள அனல்மின் நிலையத்திற்கு நேரடியாக கொண்டு வருவதற்கு உயர்ந்த பாலம் ரோட்டில் குறுக்கே சுமார் 60 அடி உயரத்தில் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடந்தது.

மேலும் இங்கு தயாரிக்கப்படும் மின்சாரம் வெளியில் கொண்டு செல்வதற்கு உயர்மட்ட மின்சாரகோபுரம் அமைக்கும் பணியும் நடந்தது.

80 சதவீத பணிகள் முடிந்து 2025ம் ஆண்டு இதை திறப்பதற்காக அனைத்து வேலைகளும் முழு வீச்சில் நடந்து வந்தது.

இதை போல குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு முதல் கட்டமாக 2500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. முதல் கட்டமாக ரூ.6 கோடியே 24 லட்சத்தில் டெண்டர் விடப்பட்டு ஆரம்பகட்ட பணியும் தொடங்கியது.

உடன்குடி அருகில் உள்ள கூடல்நகர் கிராமத்தில் 40 குடும்பங்களை இடம் மாற்றம் செய்ய உடன்குடி அய்யா நகரில் ரூ.4.5 கோடியில் வீடு கட்டும் பணியும் தொடங்கியது. 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் அனல் மின் நிலையத்தை தொடங்கி வைப்பதாகவும், ராக்கெட் ஏவுதளத்திற்கு அடிக்கல் நாட்டுவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் பாதிப்பு காரணமாக அணுமின் நிலையம் மற்றும் ராக்கெட் ஏவுதளத்திற்கு வர வேண்டிய முக்கியமான மூலப்பொருட்கள் வெளியில் இருந்து கொண்டு வர முடியவில்லை என்பதால் பணிகள் தாமதம் ஆவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கூறும் போது, பாராளுமன்ற தேர்தல் அறிவிப்புக்கும் முன் இந்த இரு திட்ட விழாக்களும் நடைபெறும் என்றனர்.

# வடியாத வெள்ளத்தால் 200 குடும்பத்தினர் தவிப்பு



திருச்செந்தூர், டிச.28

தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த கனமழையால் மாவட்டம் முழுவதும் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. மெஞ்ஞானபுரம் பகுதியில் கனமழையால் மெஞ்ஞானபுரம் ஷாலோம் நகர், விஜி குமரன் நகர், கல்விளை, திருப்பணி ஆகிய பகுதிகளில் சடையநேரி குளம் உடைந்ததால் வெள்ளம் புகுந்தது.

சுமார் 5 அடியில் இருந்து 10 அடி வரை தண்ணீர் சூழ்ந்திருந்தது. தற்போது தண்ணீர் வடிய தொடங்கி உள்ளது. சில இடங்களில் 2 அடி முதல் 5 அடி வரை தண்ணீர் உள்ளது.

தற்போது ஷாலோம் நகரில் 5 அடி தண்ணீர் சூழ்ந்துள்ளது. தற்போது இந்த பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் சுமார் 200க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளில் குடியிருக்க முடியாமல் உயரமான பகுதியில் உள்ள தங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளனர்.

சிலர் பாதுகாப்பான இடங்களில் தங்கி உள்ளனர். சிலர் நிவாரண முகாம்களில் தங்கி உள்ளனர். மெஞ்ஞானபுரம் போலீஸ் நிலையம் தண்ணீரில் மூழ்கி அனைத்து ஆவணங்களும் சேதமானது. இன்று வரை போலீஸ் நிலையம் எதிரே உள்ள தனியார் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

# ராஜமாதாவாக இருக்க வேண்டிய சசிகலா நம்பிக்கை துரோகி யார்?



பல்லடம், டிச.28

பல்லடம் அருகே திருப்பூர் மாநகர் மற்றும் புறநகர் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில் முன்னாள் முதல்வரும், சட்டப்பேரவை எதிர்கட்சித்துணைத் தலைவருமான ஓ.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:

கொங்கு மண்டல அதிமுக கோட்டையை மீட்கவே இந்த கூட்டம். அதிமுக எனும் மாபெரும் இயக்கத்தை எம்.ஜி.ஆர். தொண்டர்களுக்காக உருவாக்கினார். தொண்டர்களின் உரிமையை காக்கும் இயக்குமாக இருக்க வேண்டும் என்று, பல்வேறு சட்ட விதிகளை அவருடைய காலத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தினார். மிட்டா, மிராசுதாரர்கள் தான் பதவிக்கு வர முடியும். இனி தங்கமணி, வேலுமணி போன்றவர்கள் தான் அந்த பதவிக்கு வரமுடியும். ஜெயலலிதா 2 முறையும், சசிகலா 1 முறையும் என்னை முதலமைச்சர் ஆக்கினார்கள். சசிகலா பாவம். இன்றைக்கு சின்ன குழந்தைகளுக்கு சாக்லெட் கொடுத்துகொண்டிருக்கிறார். ராஜமாதாவாக இருக்க வேண்டிய சசிகலா, இந்த நிலைமைக்கு ஆளாக்கிய நம்பிக்கை துரோகி யார்? என்னோடு பயணிப்பவர்களுக்கு காலமெல்லாம் நன்றிக்கடனுடன் இருப்பேன். ஒன்றரை கோடி தொண்டர்களை, இரண்டரை கோடி தொண்டர்களாக மாற்றுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து நிருபர்களுக்கு அவர் பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:

பழனிசாமி நடத்திய பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களால், அவர்களுக்கும் எந்த பயனும் கிடையாது. மக்களுக்கும் பயன் கிடையாது. 10 ஆண்டு காலம் இந்தியாவை வலிமையாக மாற்றியுள்ள பிரதமர் மோடிக்கு ஆதரவு தருவது தான் எங்கள் நிலைப்பாடு. கழகத்தின் சட்ட விதிகள் காற்றில் பறந்துள்ளன. ஜன.19ம் தேதி வரும் நீதிமன்ற தீர்ப்பு, முக்கியமானதாக இருக்கும். அதன் மூலம் பழனிசாமிக்கு ஒரு முடிவு வரும். மக்கள் அளிக்கும் தீர்ப்பு தான் முக்கியமானதாக கருதுகிறோம். நானும், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரனும் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளோம். பொதுவாழ்வில் இருக்கும் அமைச்சர் உதயநிதி பொறுப்பாக பேச வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் தொழில் முனைவோர் கலந்து கொண்டு தொழில் துவங்கி பயன் பெறலாம்: கலெக்டர் தகவல்

திருப்பூர், டிச.28

தமிழகஅரசின்பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் சேவைகள் மற்றும் திட்டங்களை மக்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் கொண்டு சேர்க்கும் வகையில் ‘மக்களுடன் முதல்வர்;” திட்டம் தமிழ்நாடு முதல்வரால் கடந்த 18ம் தேதி துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உட்பட 13 துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மக்களை எளிதாக சென்றடையும் வகையில், திருப்பூர் மாவட்டத்தின் மாநகராட்சி பகுதிகள், நகராட்சி பகுதிகள், பேரூராட்சி பகுதிகள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வரும் ஜனவரி 5ம் தேதி வரை தொடர்ச்சியாக முகாம்கள் நடத்தப்படுகிறது.

இம்முகாம்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ்செயல்படும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சுய வேலை வாய்ப்பு திட்ட ங்களான அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் தொழில் முனைவோர்கள் பயன் பெறும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே, திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த பொதுமக்கள் மற்றும் ஆர்வ முள்ள தொழில் முனைவோர்கள்இம்முகாம்களில் கலந்து கொண்டு தொழில் துவங்கி பயன் பெறலாம் என மாவட்ட கலெக்டர்தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.40 உயர்வு



சென்னை, டிச.28

சென்னையில் இன்று ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.47,200க்கும் கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் ரூ.5,900க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை சற்று குறைந்துள்ளது. கிராமுக்கு 30 பைசா குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.80.700க்கும் பார் வெள்ளி ரூ.80,700க்கும் விற்பனையாகிறது.

# ரூ.50 கோடி மோசடி செய்த நிதி நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் அமைச்சரிடம் பொதுமக்கள் புகார்



கிருஷ்ணகிரி, டிச.28

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியை சேர்ந்த ஒருவர், தனது சகோதரி மற்றும் உறவினர்கள் உள்ளிட்டோருடன் இணைந்து திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் நிதி நிறுவனம் நடத்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை பகுதிகளில் கடந்த, 2021ம் ஆண்டு முதல், 7 கிளைகளுடன், போச்சம்பள்ளியை தலைமையிடமாக கொண்டு நிதி நிறுவனம் நடத்தி உள்ளனர். இதில், கடந்தாண்டு தீபாவளி சிறு சேமிப்பு திட்டம் என்ற பெயரில் பல கவர்ச்சி திட்டங்களை அறிவித்துள்ளனர்.

இதை நம்பி, போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை உள்ளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் மற்றும், தர்மபுரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டங்கள், ஆந்திர மாநிலம் குப்பத்தை சேர்ந்தவர்கள் உள்பட, ஆயிரக்கணக்கானோர் மாத தவணையாக, 50 கோடி ரூபாய்க்கும் மேல் கட்டி ஏமாந்துள்ளனர்.

இது தொடர்பாக இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறி, போச்சம்பள்ளி மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 100க்கும் மேற்பட்டோர் நேற்று கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகம் முன் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு கலெக்டர்அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டத்தை முடித்து திரும்பிய அமைச்சர் சக்கரபாணியிடம் பொது மக்கள் புகார் தெரிவித்து மனு கொடுத்தனர்.

அந்த நேரம் காரில் இருந்து இறங்கி வந்த அமைச்சர் இது தொடர்பாக மாவட்ட கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டிடம் கூறி உள்ளேன். உங்கள் பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது.

# ஓ.பன்னீர்செல்வம் சிறை செல்வது உறுதி



கோவை, டிச.28

சில ரகசியங்களை வெளியிட்டால் எடப்பாடி பழனிசாமி திகார் சிறைக்கு செல்ல நேரிடும் என கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்து இருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக இன்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

★ ஓ.பன்னீர் செல்வம் சிறைக்கு செல்வது உறுதியாகிவிட்டது. அவர் மீதான வழக்கை விரைவில் விசாரணைக்கு வர உள்ளது. அதில் அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும்.

★ ஜெயலலிதாவிற்கு ரூ.2 கோடி கடன் கொடுத்ததாக ஓபிஎஸ் சொன்னது, மோசமான வார்த்தை.

★ போடி தொகுதியில் ஜெயலலிதாவிற்கு எதிராக வேலை பார்த்தவர் ஓபிஎஸ்.

★ தென்மாவட்டங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் முன்பே கணித்துச் சொன்னது. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால் பாதிப்பை தவிர்த்திருக்கலாம்.

★ வடசென்னையில் உள்ள தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய வேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையாக ஆய்வு நடத்தியிருந்தால் விபத்து நடந்திருக்காது.

★ எண்ணூரில் எண்ணெய் மற்றும் வாயுக்கசிவால் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தண்டையார்பேட்டையில் பாய்லர் வெடித்த விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

சென்னை, டிச.28

சென்னை தண்டையார் பேட்டையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் இன்று எண்ணெய் கசிவு ஏற்பட்டு பாய்லர் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 4 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். உயிரிழந்தவரின் பெயர் பெருமாள் வயது (52) கரிமேடு பகுதியை சேர்ந்தவர். பாய்லர் வெடித்து விபத்து ஏற்பட்ட போது ஊழியர்கள்அலறிஅடித்துவெளியே ஓடி வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் அறிந்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஸ்டான்லி மருத்துவமனையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன்



சென்னை, டிச.28

சென்னை எண்ணூர் கோரமண்டல் உர ஆலையில் இருந்து வெளியேறிய அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டு, ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்தார். அப்போது அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து டாக்டர்களிடம்கேட்டறிந்தார்.

இதன்பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

★ எண்ணூரில் இரவு ஏற்பட்ட வாயு கசிவால் கண்ணெரிச்சல் உள்ளிட்ட உபாதைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 6 பேர் நலமுடன் உள்ளனர், விரைவில்வீடுதிரும்புவர்.

★ குழந்தைகள் உள்பட யாருக்கும் தீவிர பாதிப்பு இல்லை. யாரும் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படவில்லை.

★ பெரியகுப்பம் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் மருத்துவ முகாமும் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# நள்ளிரவில் வீட்டு கதவை தட்டும் மர்ம உருவம்

ஆலங்காயம், டிச.28

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த நடுபட்டறை கிராமத்தை சேர்ந்தவர் தாமோதிரன். இவர் தேங்காய் மண்டி வைத்து வியாபாரம் செய்து வருகிறார். சில நாட்களுக்கு முன்பு தாமோதரன் வியாபாரத்திற்காக வெளியூர் சென்று இருந்தார்.

இவரது வீடு கிராமத்தை தள்ளி மயானம் மற்றும் ஆற்று பகுதிக்கு செல்லக்கூடிய பகுதியில் அமைந்துள்ளது. கடந்த 3 நாட்களாக தினமும் நள்ளிரவில் வீட்டின் கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. கதவை யாரோ தட்டுவதால் தாமோதரன் குடும்பத்தினர் பீதியில் இருந்தனர்.

வெளியூரில் இருந்து வந்த தாமோதரன் வீட்டிற்கு வந்தார். அவரது மகன் நடந்த சம்பவத்தை தெரிவித்தார்.

அவர் தனது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கேமரா காட்சிகளை பார்த்தார். அப்போது தினமும் நள்ளிரவில் ஒரே நேரத்தில் வெள்ளை நிறத்தில் ஒளி போன்ற உருவம் செல்வது பதிவாகி இருந்தது. இதனால் கிராமத்தில் பேய் பீதி ஏற்பட்டுள்ளது.

அந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி கிராம மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

கிராமத்தில் உள்ள சிலர் பேய் எல்லாம் ஒன்றும் கிடையாது என்று தெரிவித்தனர். ஆனாலும் வீடியோவில் வரும் உருவம் பயமூட்டுவதாக உள்ளது.

# புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு வனத்துறை கட்டுப்பாடு

கோவை, டிச.28

கோவை மாவட்டத்தில் வனப்பகுதியை ஒட்டி பல்வேறு ஓட்டல்கள், நட்சத்திர விடுதிகள், பொழுது போக்கு மையங்கள் ஆகியவை அமைந்து உள்ளன. இங்கு புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களை கவரும் வகையில் பல்வேறு கவர்ச்சிகர அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

எனவே கோவையின் வனப்பகுதியை ஒட்டிய விடுதிகளில் தங்கியிருந்து நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் புத்தாண்டு கொண்டாட பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது அவர்கள் அங்குள்ள ஓட்டல்களில் அறைகளை முன்பதிவு செய்யத்தொடங்கி உள்ளனர். இதனால் கோவையின் வனப்பகுதியை ஒட்டி அமைந்து உள்ள ஓட்டல்களில் அறைகள் நிரம்பி வழிகின்றன.

இதற்கிடையே கோவை கோட்ட வனத்துறை நிர்வாகம் சார்பில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கும் வகையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. அதன்படி வனப்பகுதியை ஒட்டி அமைந்து உள்ள தங்கும் விடுதிகள், ரிசார்ட்கள், நடத்திர விடுதிகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களில்காட்டுவிலங்குகளுக்கு அச்சம் தரும்வகையில் அதிக சப்தம் எழுப்பும் ஒலி பெருக்கிகளை பயன்படுத்தக்கூடாது.

விடுதிகளில் பட்டாசுகள் மற்றும் வாணவேடிக்கைகளை நிகழ்த்தக்கூடாது. கேம்ப் பயர் நிகழ்ச்சிக்கு அனுமதி இல்லை. வாடிக்கையாளர்கள்குடித்துவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது. மேலும் வாகனங்களில் அதிக ஒளி உமிழும் விளக்குகளை பயன்படுத்தக்கூடாது. மது குடித்துவிட்டு வனப்பகுதியில் வாகனங்களை இயக்கக்கூடாது. மேலும் புத்தாண்டு அன்று இரவு 8 மணிக்கு மேல் வனச்சாலைகளை பயன்படுத்தக்கூடாது.

புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது வீணாகும் உணவுப்பொருட்கள் மற்றும் தேவையற்ற கழிவுகளை வனப்பகுதியில் கொட்டக்கூடாது. தங்கும் விடுதிகளுக்கு அருகில் வன விலங்குகள் தென்பட்டால் அவற்றை உடனடியாக விரட்ட முயலாமல் வனத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

கோவையின் வனப்பகுதியை ஒட்டி அமைந்து உள்ள விடுதி உரிமையானர்கள் மேற்கண்ட அறிவிப்புகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இல்லையெனில் சம்பந்தப்பட்ட விடுதிகளின் மீது சட்டப்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை வனத்துறை நிர்வாகம் வெளியிட்டு உள்ளது. இது வனப்பகுதியை ஒட்டி புத்தாண்டு கொண்டாடுவதற்காக காத்திருக்கும் வாடிக்கையாளர் மற்றும் பொதுமக்கள்மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 28.12.2023




## இந்த ஆண்டின் சிறந்த வசூல் செய்த திரைப்படத்திற்கான பட்டியலில் இடம் பிடித்த டங்கி

ராஜ்குமார் ஹிரானியின் இயக்கத்தில் உருவான திரைப்படம் 'டங்கி'. இந்த படத்தில் ஷாருக்கான் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும், பொமன் இரானி, டாப்ஸி பண்ணு, விக்கி கௌஷல், விக்ரம் கோச்சார், அனில் குரோவர் உள்ளிட்ட திறமையான நடிகர்கள் அவர்களுக்கென பிரத்யேக கதாபாத்திரங்களுடன் நடித்துள்ளனர்.

ஜியோ ஸ்டுடியோஸ், ரெட் சில்லீஸ் என்டர்டெய்ன்மென்ட் மற்றும் ராஜ்குமார் ஹிரானி பிலிம்ஸ் ஆகிய பட நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அபிஜித் ஜோஷி, ராஜ்குமார் ஹிரானி மற்றும் சுனில் தில்லான் ஆகியோர் கதை எழுதி இருக்கிறார்கள். 'டங்கி' திரைப்படம் டிசம்பர் 21ஆம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில்வெளியாகிகுறிப்பிடத்தக்கவகையில் அதன் முத்திரையைப் பதித்துள்ளது.

'டங்கி' திரைப்படம் 100 கோடி ரூபாய் கிளப்பில் நுழைந்து, பாக்ஸ் ஆபிஸில் தனது இருப்பிடத்தை உறுதி செய்தது. தற்போது இந்த திரைப்படம் 250 கோடி ரூபாயை வசூலித்து சாதனை படைத்துள்ளது. 'பதான்' மற்றும் 'ஜவான்' ஆகிய திரைப்படங்களுக்கு பிறகு இந்த ஆண்டில் ஷாருக்கான் நடிப்பில் வெளியான 'டங்கி' திரைப்படம் இந்தியாவில் மட்டும் 100 கோடி ரூபாய் கிளப்பில் நுழைந்த மூன்றாவது திரைப்படமாகும்.

இத்திரைப்படம் சுமார் 29.25 கோடி ரூபாய் முதல் 30.25 கோடி ரூபாய் வரை வசூலித்து, ஞாயிற்றுக்கிழமையன்று அதன் மொத்த வசூல் 102.50 கோடி ரூபாயாக இருந்தது. இதன் மூலம் நூறு கோடி ரூபாய் கிளப்பில் இணைந்த ஷாருக்கானின் பத்தாவது படமாக 'டங்கி' இடம்பெற்றது. இந்த திரைப்படத்தின் வசூல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தற்போது இத்திரைப்படம் ரூ.250 கோடி எட்டி, ரூ.250 கோடி கிளப்பில் இணைந்திருக்கிறது.



## நீயும் இங்கே நானும் இங்கே சேரும் வழி எங்கே வைரலாகும் மணிகண்டன் பட பாடல்



குட் நைட் திரைப்படத்தில் மோகன் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்து பலரையும் கவர்ந்த நடிகர் மணிகண்டன் தற்போது அறிமுக இயக்குனர் பிரபுராம் வியாஸ் எழுதி இயக்கியுள்ள 'லவ்வர்' (lover) திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். இதில் ஸ்ரீகௌரி பிரியா, கண்ணன் ரவி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இப்படத்திற்கு ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இதையடுத்து இப்படத்தில் இடம்பெற்றுள்ள முதல் பாடலான 'வெலகாத' பாடல் வீடியோ இன்று மாலை 5 மணிக்கு வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

அதன்படி இப்படத்தின் பாடல் தற்போது வெளியாகியுள்ளது. இந்த பாடலை இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோவை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர். 'லவ்வர்' திரைப்படம் 2024ஆம் ஆண்டு காதலர் தினத்தன்று வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நிவின் பாலி படத்தின் புதிய அறிவிப்பு உற்சாகத்தில் ரசிகர்கள்



இயக்குனர் ராம் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'ஏழு கடல் ஏழு மலை'. இந்த படத்தில் கதாநாயகனாக மலையாள நடிகர் நிவின் பாலி நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக அஞ்சலி நடித்து வருகிறார். மேலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் சூரி நடித்துள்ளார். வி ஹவ்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்.

இப்படத்தின் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியானது. இதில் நிவின் பாலியின் தோற்றம் ரசிகர்களை கவர்ந்து பெரிய அளவில் பேசப்பட்டது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. 'ஏழு கடல் ஏழு மலை' படத்தில் 90 நிமிடங்களுக்கு கிராபிக்ஸ் காட்சிகள் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ ஜனவரி 2ஆம் தேதி மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

## பாரசைட் பட நடிகர் மர்ம மரணம் தற்கொலையா என போலீசார் விசாரணை




இயக்குனர் பாங் ஜூன் ஹோ இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'பாரசைட்'. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது மட்டுமல்லாமல் நான்கு பிரிவுகளில் ஆஸ்கர் விருதை வென்றது. இந்த படத்தில் லீ சுன் கியுன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

நடிகர் லீ சுன் கியுன் கடந்த 2001ஆம் ஆண்டு வெளியான 'லவ்வர்ஸ்' என்னும் சிட்காம் தொடரில் அறிமுகமானார். 2014ஆம் ஆண்டு இவர் நடித்த 'எ ஹார்ட் டே' திரைப்படம் உலகம் முழுவதும் நல்ல வரவேற்பைப் பெற்றது. கடைசியாக இந்த ஆண்டு வெளியான 'ஸ்லீப்' என்ற படத்தில் லீ சுன் கியுன் நடித்திருந்தார்.

48 வயதாகும் லீ சுன் கியுன் இன்று (டிசம்பர் 27) சியோல் நகரில் உள்ள ஒரு பார்க்கில் தனது காரின் உள்ளே இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார். அவரது உடலை கைப்பற்றிய போலீஸார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அவரது மரணம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். லீ சுன் கியுன் மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## தனித்துவமான நடன அசைவில் ஷகிராவின் சிலை அன்னார்ந்து பார்த்து ரசிக்கும் ரசிகர்கள்



பாப் உலகில் பிரபல பாடகியாக இருந்து வருபவர் ஷகிரா (வயது 45). கொலம்பியன் பாடகரான இவர் பாடலாசிரியர், இசையமைப்பாளர் என பன்முகத் தன்மை கொண்டவர். லாண்டரி சர்வீஸ் (Laundry Service) என்கிற ஆல்பத்தின் மூலம் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்தவர் ஷகீரா.

2010ஆம் ஆண்டு உலக கோப்பை கால் பந்து போட்டியில் இவர் பாடிய 'ஷமினா மினா ஓய்..ஓய்.. வக்கா..வக்கா' பாடல் உலகம் முழுவதும் இவருக்கு பெரும் புகழை பெற்று தந்தது. கிராமி விருதுகள், இசை விருதுகள் என பல்வேறு விருதுகளை வாங்கி குவித்துள்ளார்.

இந்நிலையில், பாடகி ஷகீராவிற்கு அவரது சொந்த ஊரான கொலம்பியாவில் உள்ள பரன்குவிலரஸில் 21 அடி உயர சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையை கலைஞர் யினோ மார்க்ஸ் வடிவமைத்துள்ளார். இந்த சிலை கடந்த 2005ஆம் ஆண்டு வெளியான 'ஹிப்ஸ் டோண்ட் லை' (Hips don't lie) என்ற ஆல்பத்தில் ஷகிராவின் தனித்துவமான நடன அசைவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை ஷகீராவின் தந்தை, தாய் மற்றும் பரன்குவிலரஸ் மேயர் முன்னிலையில் திறக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோவை ஷகீரா தனது சமூக வலைதளப்பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## படப்பிடிப்பை தொடங்கிய நானி படக்குழு

தெலுங்கில் முன்னணி நடிகரான நானி வித்தியாசமான கதைக்களத்தை தேர்ந்தெடுத்து தன் நடிப்பின் மூலம் ரசிகர்களை கவர்ந்து வருகிறார். இவர் தற்போது 'அடடே சுந்தரா' இயக்குனர் விவேக் ஆத்ரேயா இயக்கத்தில் 'சூர்யாவின் சனிக்கிழமை' திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இதில், நானிக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் இணைந்துள்ளார். மேலும், எஸ்.ஜே.சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். டிடிவி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் கிளிம்ப்ஸ் வீடியோ சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, 'சூர்யாவின் சனிக்கிழமை' திரைப்படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இதில் நானி மற்றும் பிரியங்கா மோகன் காட்சிகள் படமாக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

## டீன் எல்கர் அசத்தல் சதம்: 2வது நாள் ஆட்ட முடிவில் தென் ஆப்பிரிக்கா 256/5



தென் ஆப்பிரிக்கா, இந்தியா மோதும் முதல் டெஸ்ட்போட்டிசெஞ்சூரியன்நகரில்நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பந்துவீசுவதாக அறிவித்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 245 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 14 பவுண்டரி, 4 சிக்சருடன் சதமடித்து 101 ரன்களில் கே.எல்.ராகுல் ஆட்டமிழந்தார்.

தென் ஆப்பிரிக்கா சார்பில் ரபாடா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, தென் ஆப்பிரிக்கா அணி முதல் இன்னிங்சை தொடர்ந்தது. தொடக்க ஆட்டக்காரர் மார்க்ரம் 5 ரன்னில் அவுட்டானார். சோர்சி 28 ரன்னிலும், பீட்டர்சன் 2 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

4வது விக்கெட்டுக்கு டீன் எலருடன் ஜோடி சேர்ந்த டேவட் பெடிங்காம் அரை சதம் கடந்து 56 ரன்னில் வெளியேறினார். டீன் எல்கர் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார்.

இறுதியில், தென் ஆப்பிரிக்கா அணி 66 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 256 ரன்கள் சேர்த்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. டீன் எல்கர் 140 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இந்தியாசார்பில்பும்ரா, சிராஜ்தலா2விக்கெட்டும், பிரசித்கிருஷ்ணாஒருவிக்கெட்டும்வீழ்த்தினர்.

## முதல் டி20 போட்டி: சொந்த மண்ணில் நியூசிலாந்தை வீழ்த்திய வங்காளதேசம்



வங்காளதேச அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த ஒருநாள் தொடரில் நியூசிலாந்து 21 என தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான முதலாவதுடி20போட்டிநேப்பியரில்இன்றுநடைபெற்றது. டாஸ்வென்றவங்காளதேசம் பந்துவீச்சை தேர்வு செய்தது.



அதன்படி, முதலில் பேட் செய்த நியூசிலாந்து 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 134 ரன்கள் மட்டுமே எடுத்தது. அதிகபட்சமாக நீஷம் 48 ரன்கள் எடுத்தார்.

வங்காளதேசம் சார்பில் ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்டும், மெஹிதி ஹசன், முஸ்தபிசுர் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 135 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் லிட்டன் தாஸ் பொறுப்புடன் ஆடி 42 ரன்கள் எடுத்தார்.

இறுதியில், வங்காளதேசம் 18.4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு137 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. டி20 தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. ஆட்ட நாயகனாக மெஹிதி ஹசன் தேர்வு செய்யப்பட்டார்.

## பிராட் மாதிரி ஜண்டா மந்திரம் போட்ட கோலி.. உடனே விக்கெட் விழுந்த அதிசயம் வீடியோ வைரல்



தென் ஆப்பிரிக்கா இந்தியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நேற்று தொடங்கியது. முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 245 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக கேஎல் ராகுல் 101 ரன்கள் எடுத்தார்.

இதனையடுத்து தென் ஆப்பிரிக்கா அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர்களாக மார்க்ரம் எல்கர் களமிறங்கினார். மார்க்ரம் 5 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து எல்கருடன் டோனி டி ஜோர்ஜி ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை அருமையாக எதிர் கொண்டு விளையாடினர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய எல்கர் அரைசதம் விளாசினார். பொறுப்புடன் ஆடிய இந்த ஜோடி 93 ரன்கள் பார்டனர்ஷிப் அமைத்தது.

இந்நிலையில் விராட் கோலி ஸ்டெம்பிள் இருந்த பெய்ல்சை மாற்றி வைத்தார். மாற்றி வைத்த முதல் பந்து பவுண்டரி போனது. 2 பந்தில் பும்ரா பந்து வீச்சில் டோனி டி ஜோர்ஜி அவுட் ஆனார். இதற்கு முன்பு ஸ்டூவர்ட் பிராட் இரண்டு பெய்ல்ஸை எடுத்து சற்று பார்த்த பின், இரண்டையும் மாற்றி வைத்தார். அடுத்த பந்தே ஆட்டமிழந்தார். அதுபோல கோலி முயற்சிக்கு 2 பந்துகள் கடந்து விக்கெட் கிடைத்தது. தற்போது இந்த 2 வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## சென்சூரியனில் 2வது சென்சூரி.. வரலாற்று சாதனை படைத்த கேஎல் ராகுல்

தென் ஆப்பிரிக்கா இந்தியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி செஞ்சூரியன் நகரில் நேற்று துவங்கியது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. அதை தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் கடுமையாக போராடி 245 ரன்கள் மட்டுமே எடுத்தது. தென்னாப்பிரிக்கா சார்பில் அதிகபட்சமாக ரபாடா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 14 பவுண்டரி 4 சிக்சருடன் சதமடித்து 101 ரன்களில் ராகுல் ஆட்டமிழந்தார். இதன் மூலம் தென் ஆப்பிரிக்க மண்ணில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகபட்ச ஸ்கோர் பதிவு செய்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற மாபெரும் சாதனையையும் அவர் படைத்தார்.

அதை விட கடைசியாக இதே மைதானத்தில் கடந்த2021ல்நடைபெற்றடெஸ்ட்போட்டியில் 123 ரன்கள் குவித்த அவர் இந்தியா 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற முக்கிய பங்காற்றினார். அந்த வரிசையில் தற்போது இப்போட்டியிலும் சதமடித்துள்ள அவர் தென் ஆப்பிரிக்காவில் உள்ள சென்சூரியன் மைதானத்தில்டெஸ்ட்கிரிக்கெட்டில்2சதங்கள் அடித்த முதல் வெளிநாட்டு பேட்ஸ்மேன் என்ற தனித்துவமான சாதனையும் படைத்துள்ளார்.

இதற்கு முன் சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி, ஸ்டீவ் ஸ்மித் போன்ற வெளிநாட்டு பேட்ஸ்மேன்கள் அனைவரும் சென்சூரியன் கிரிக்கெட் மைதானத்தில் அதிகபட்சமாக தலா 1 டெஸ்ட் சதம் மட்டுமே அடித்துள்ளனர். தற்போது கேஎல் ராகுல் மட்டுமே 2 சதங்கள் அடித்த முதல் வெளிநாட்டு வீரராக சாதனை படைத்துள்ளார்.



**உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

**விளக்கம்:**
அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.